# இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி சம்மந்தப்பட்ட (சார்ந்த) கேள்விகள் - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** 2000 ஆண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்தவ சபைகளின் கூற்று என்னவென்றால், அவருடைய வாழ்வின் இறுதியில், நசரேயனாகிய இயேசு சிலுவை மரணத்தை அடைந்து, சகல மரியாதையோடு அடக்கம், பண்ணப்பட்டு அவர் மூன்றாம் நாளில், உயிரோடு எழுந்தார் என்பதே.

**டாக்டர் கிரேக் A ஈவான்ஸ்**:.அதற்கான ஆதாரங்கள் உள்ளது, அதற்கான சாத்தியகூறுகள் உள்ளது, என்னை பொறுத்தவரை எல்லா காரியங்களும் தெள்ளத்தெளிவாக இருக்கிறது, இவை நிர்பந்தைக்கப்படுவது போல காணப்படுகிறது.

**அறிவிப்பாளர்:** ஆனால் சிலருடைய கருத்து இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்பதாகும், அவர் அங்கு சுயநினைவை இழந்து கல்லறையில் அவர் சரியானார் என்கின்றனர். சில நவீன கால ஞானிகளின் இயேசுவின் சரீரம் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, குப்பையில் தூக்கி எரிப்பட்டது, காட்டு நாய்கள் அதை தின்றதாக கூறுகின்றனர். இயேசுவின் உயிர்த்தெழுதலின் தோற்றம் என்பது வெறும் ஒரு கட்டுக்கதை அல்லது பிரம்மை என்கின்றனர் அது உண்மையில், இயேசுவின் வெளிப்பாடு அல்ல என்கின்றனர்.

**டாக்டர் எட்வின் யமவ்ச்சி**:.சரி, ஒருவேளை உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், அதை பற்றி நாம் பேச வேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்தவ மார்க்கம் என்ற ஒன்று தோன்றியிருக்காது.

**டாக்டர் கேரி ஹேபெர்மேஸ்**:..நான் பத்து வருடங்கள் இறைநம்பிக்கையற்றவனாக இருந்தேன். எனக்கு, வாழ்க்கைக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்ற கேள்வி இருந்தது. நான் யோசித்திருக்கிறேன், நான் அடக்கம்பன்னப்படும்போது, என் கல்லறையின் மேல் இலைகள் பறக்கும் அவ்வளவுதான. அல்லது ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? எண்ணெய் பொறுத்தவரை, நான் உயிர்த்தெழுதலை பற்றிய ஆராய்ச்சியில் தேறினவன். உங்களுக்கு தெரியுமா? இந்த ஆராய்ச்சியினால் என்ன நடக்கும் என்று நான் யோசித்த நாட்கள் உண்டு. ஆனால் இறுதியான முடிவு என்னவென்றால், அவை என்னை வெளியே கொண்டுவந்தது, நம்பிக்கையற்ற நிலையை மாற்றியது. என்னுடைய, கருத்து வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உள்ளதென்று எடுத்துரைப்பது உயிர்த்தெழுதல் தான். இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்ததினால் நமக்கு நித்தியத்தின் நிச்சயம் உண்டாகிறது.

**அறிவிப்பாளர்:** உலக மற்றும் கிறிஸ்தவ உபகரணங்களில் இருந்து வரலாற்று ஆதாரங்களின் சோதனைகள் மூலம் புலப்படும் காரியங்கள் என்ன?

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்**:.இயேசுவை இஎசுவாகவே இருக்க அனுமதிக்க வேண்டும். அவர் தம்மை குறித்து கூறிட இடமளித்து அவராகவே இருக்க வாய்ப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உங்களுடைய இஷ்டப்படி வரலாற்றில்

இயேசுவை பற்றி சொல்லப்பட்டவைகளை உங்களுடைய கற்பனை படி மாற்றிக்கொள்வீர்கள். அப்போது நீங்கள் உங்களை போன்ற ஒரு சாதாரண நபராக இயேசுவை காண்பித்திடுவீர்கள்.

**அறிவிப்பாளர்:** இயேசு உண்மையாகவே மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நிருபிக்கும் ஆதாரங்கள் உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறீர்கள்?

**டாக்டர்** டேரல் பாக்:.இயேசு தம்மை குறித்து கூறியது உண்மையென்றால், நாம் அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள கடமை பட்டிருக்கிறோம், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது அசௌகரியமானதாக இருக்கும்.

**அறிவிப்பாளர்:** இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம் உலக தரம் வாய்ந்த வரலாற்று நிபுணர்கள், இறையியலாளர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்வதை கேளுங்கள்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: வணக்கம், நாம் பார்த்துக்கொண்டிருக்கும் கேள்வியும்: “இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தாரா?” இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாக இருப்பது எது? சிந்தாந்த மேதை Dr.வில்லியம் லேன் கிரேக் விமர்சகர்கள் ஒப்புக்கொள்ளும் நான்கு வரலாற்று உண்மைகளை நமக்கு பாக வைக்கிறார். கேளுங்கள்.

**கிரேக்**:..மதிப்பிற்குரிய பல வரலாற்று வல்லுனர்கள் நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவை பற்றிய வெளிப்படையான வரலாற்று

உண்மைகளை முன்வைக்க இந்த நான்கு அடிப்படை உண்மைகளை கூறுகின்றனர். அவைகளில் முதன்மையானது இயேசுவின் மரியாதைக்குறிய அடக்கம். அவற்றில் இரண்டாவதானது காலியான கல்லறையை கண்டறிந்தது. மூன்றாவது உயிர்த்தெழுந்த சடலமாக இயேசு தரிசனமானது.  நான்காவது இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று சீஷர்களுக்கு உதயமான நம்பிக்கை.

**ஆன்கர்பெர்க்:** இந்த உண்மைகளின் ஆதாரங்களை பற்றி கடந்த சிலவாரங்களாக பார்த்தோம். இதற்கு இறை நம்பிக்கையற்றவர்கள்அளித்த பிரதியுத்திரத்தை குறித்து பார்க்க இருக்கிறோம். அதாவது, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு தொடர்புடைய ஆதாரங்களை  குறித்து 5 இயற்க்கை கொள்கைகளை முன்வைக்கின்றனர். Dr.கேரி கேபெர்மாஸ், இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றிய ஆதாரங்கள் என்ற தலைப்பில் உலகின் வரலாற்று வல்லுநர்களில் முதல் நிலையில் இருப்பவர்.

கேரி ஹேபெர்மேஸ்:.வரலாற்று ரீதியாக, முக்கியமான 5 இயற்கை கொள்கைகள் முன்மொழியப்படுகிறது. அதில் ஒருசில திருட்டுத்தனமான கொள்கைகள் இருக்கிறது. சீஷர்கள் அந்த சரீரத்தை என்னவோ செய்துவிட்டனர் - திருடி விட்டனர், அதாவது - அவருடைய தரிசனத்தை பற்றி பொய்யான வதந்தியை பரப்பினர். வேறுயாரோ அவர் சரீரத்தை எடுத்துக்கொண்டனர். மூன்றாவது, இயேசு சிலுவையில் மரிக்க வில்லை. நான்காவது, சீஷர்களுக்கு பிரம்மை ஏற்ப்பட்டது. அல்லது

**ஆன்கர்பெர்க்:** சரி, ஒரு கிறிஸ்தவராக இல்லாத ஒருவர், இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய ஆதாரங்களை தகர்க்கும்படியாக

இந்த இயற்க்கைகொள்கைகளை முன்வைத்தால் என்ன நடக்கும்? எனவே, இந்த கொள்கைகளை எல்லாம் நிராகரத்தி இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்ற உண்மையின் ஆதாரங்களை வல்லுநர்கள் எதினால் ஏற்றுக்கொள்கிறார்கள். முதலாவதாக, சீஷர்கள் இயேசுவின் சரீரத்தை திருடிச்சென்றனர் அவர்கள் முன்புவெளிப்பட்டார் என்பது பொய் என்ற கொள்கையை ஆராய்ந்திடவிரும்புகிறேன்.

கேரி ஹேபெர்மேஸ்:.கள்ளத்தனமான முதல் கருத்து என்னன்னா அவர் சரீரத்தை சீஷர்கள் திருடி அதற்கு பிறகு அவர் தங்களுக்கு தரிசனமானார் என்று சொல்லுகிற காரியங்கள் பொய்யானது என்பதுதான். 200 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த காரியத்தை பிரசித்திபெற்ற எந்த வல்லுனர்களும் ஏற்கவில்லை. அதற்கு பிறகுதான் இது பரவினது, அதாவது, இதை புதிய ஏற்ப்பாட்டில் பார்க்க முடியும். சரி, பல தரப்பட்ட காரணங்களால் தான் விமர்சக மேதைகள் தங்கள் கருத்தை விட்டு  விலகியிருப்பார்கள் என நம்புகிறேன். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசுவை தாங்கள் காண்டதாக சீஷர்கள் தான் விசுவாசித்தார்கள். எப்படி ஒரு சரீரத்தை திருட முடியும், தங்களுக்கு அவர் தரிசனமானார் என்று  எப்படி அவர்கள் பொய் சொல்ல முடியும்? இதுதான் அந்த பெரிய பாறையை தகர்க்கிறது ஏன்னா சீஷர்கள் இயேசுவை பார்த்தார்கள் என்பதை எல்லாரும் நம்புகின்றனர்.

இரண்டாவதாக, அவர்கள் முற்றிலும் மாற்றமடைந்தனர். மரிப்பதற்கு தயாராக இருக்கிற அளவுக்கு அவர்களுக்குள் மாற்றம் ஏற்ப்பட்டது. இதை அந்த பொய்யான கருத்தை  எதிர்த்து விளக்குவது எப்படி? எதிர்ப்பு தெரிவிக்கப்படும் அடுத்த இரண்டு காரியங்கள் யாக்கோபுக்கு வெளிப்பட்டது,   பவுலுக்கு வெளிப்பட்டதும் தான். எப்படி யாக்கோபையும் பவுலையும் மாற்றுக்கருத்துக்குள் கலத்தனமான

செயலுக்குள் இணைத்திட முடியும்? வேறு சில காரணங்களை சொல்லமுடியும் ஆனால் இந்த விஷயத்தை முன்வைக்கும் போது விமர்சகர்கள் சொல்வது என்ன தெரியுமா, "எனக்கு அது தெரியாது. யாரும் அந்த விதத்தை எதிர்பார்க்கவில்லை." ஆனால் இது வரலாற்று பதிவுகளில் ஒன்றாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி கிறிஸ்தவர் அல்லாத ஒருவர் முன்வைக்கும் இயற்க்கை கொள்கைகளில் இரண்டாவதாக இருப்பது: சரீரத்தை திருடியது சீஷர்கள் அல்ல என்றால், வேறு யாரோ அப்படி செய்திருக்க வேண்டும். ஒருவேளை தோட்டக்காரராக இருக்கலாம் அல்லது பேர் தெரியாத யாரோ சரீரத்தை எடுத்திருக்கலாம். இதை பற்றி வல்லுனர்கள் என்ன சொல்கிறார்கள்?

கேரி ஹேபெர்மேஸ்:.அடுத்த முயற்சி, சீஷர்களை காட்டிலும் கைத்தேர்ந்த ஏமாற்றுக்காரர்கள். அதாவது, பட்லர் திருடிவிட்டார். யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் தோட்டக்காரராக கூட இருக்கலாம். இதை இன்னும் கொஞ்சம் கடினமாக சொன்னால், முகம் தெரியாத ஒருவர் சரீரத்தை எடுத்துசென்றார். இது மாற்றுக்கருத்துடையதா இருக்கு. இந்த இரண்டாவது வகையான பொய் கொள்கையான  சீஷர்கள் சரீரத்தை எடுக்கவில்லை என்று சொன்னால் அவர்கள் அவரை பார்த்ததாக சொல்வதை நிராகரிக்க வேண்டிய சிக்கல் உண்டாகும். சீஷர்களின் அனுபவம் ஏற்ப்புடையது அல்ல என்று சொல்லும்படியான எந்த சூத்திரமும் இதுவரை முன்வைக்கப்படவில்லை ஏனென்றால்,உயிர்த்தெழுந்த இயேசுவை சீஷர்கள் கண்டதாக

நம்புகிறார்கள். வேறுயாரோ சரீரத்தை எடுத்ததாக சொன்னால் இது எப்படி சாத்தியமாகும்?

இதை, வேறு விதமாகவும் சொல்லலாம்.2வது பொய்யில். பார்த்தால், சீஷர்களை தவிர வேறுயாரோ சரீரத்தை எடுத்திருக்கின்றனர், இது காலியான கல்லறைக்கு கொடுக்கப்படும் விளக்கம். இதில் அனுபவங்களை பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. மாற்றத்தை பற்றி சொல்லவில்லை.யாக்கோபை பற்றி இல்லை.பவுலை பற்றி இல்லை. அதனால். விமர்சகர்கள் சொல்கிறார்கள், "நா அப்படி சொல்லவில்லை." சரியா? இப்ப கொஞ்சம் கொஞ்சமாக பின்னாக சென்று இந்த 2 கொள்கைகளையும் அவர்கள் விட்டுவிடுகிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** சரி, Dr. கேரி ஹெபர்மாஸ் சொல்வதை கேட்டுக்கொண்டிருக்கிறோம், அவர் சொல்வதை எத்தனை பேர் கவனித்தீர்கள் என்று எனக்கு தெரியவில்லை 2 பேரை குறிப்பிட்டார், "யாக்கோபு. இயேசுவின் சகோதரர்" மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல்." தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பு, இந்த 2 நபர்களும் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கு மிக முக்கிய சாட்சிகளாக கருதப்படுவதற்கு காரணம் என்னவென்று விளக்கிட கேட்டேன். கேளுங்கள்.

கேரி ஹேபெர்மேஸ்:.சரி, வரலாற்றியலுக்கு மிகமுக்கியமான விதி வியப்படையச்செயும் கோட்பாடு. நீங்க முக்கியமான விஷயத்தை எடுத்து சொல்லும்போது அதில் இருக்கும் குறைபாடுகளையும் ஏற்றுக்கொள்வீர்கள், அது கால சமயத்தில் நடந்த ஒன்றை எடுத்துசொல்கிறது. யோவான் சுவிசேஷம் 7ல், யாக்கோபு இறை நம்பிக்கை இல்லதாவர் என்கிறது. மேலும் விளக்கவுரை கூறுகிறது,

இயேசு வீட்டிற்கு வந்தபோது, அவருடைய சகோதர சகோதரிகள் விசுவாசிகளாக இல்லை என்று சொல்கிறது.

நானே யோசித்து பார்த்தேன்,"அதாவது தீவிரமான நாத்திகர் விசேஷித்த கண்ணோட்டத்தில் பேசுகிறார்." இங்கு ஒருவர் உயர்த்தப்பட்டு நிலைநிருத்தப்பட்டபடியால் சொல்கிறார், "இயேசு சிறப்பான வேலையை செய்திருக்கிறார்." அதை சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை.நேரிலேயே பார்க்க முடியும். எத்தனை முறை இப்படியே செய்வது, ஆ! அதை புரிந்துகொள்வது மிகவும் கடினம். அவர் எப்போதுமே ஒரு தூதன் தா, அப்படிதானே? சரியா! அதை அவர்கள் நம்புவதில்லை.

சரி, புதிய ஏற்ப்படுகளில் சில பகுதிகளில் யாக்கோபு யார் என்பதை பார்க்க முடியுமா? ஆசிய உலகின் மிக பெரிய சபையின் போதகராக இருந்தவர் அவர். அப்போஸ்தலர் 15ல் கூறுகிறது எருசலேம் ஆலோசனை சங்கத்தில் பேதுருவும் இருந்தார், பவுலும் இருந்தார். யார் இறுதி வார்த்தையை கொடுத்து என்று தெரியுமா? இவர்களில் ஒருவரா, தெரியுமா? இல்ல. யாக்கோபுதான் எழும்பி நின்று தீர்மானத்தை எடுத்துரைக்கிறார். யாக்கோபை கவனிக்கும்போது, அவருடைய  ஆளுகையை பார்க்கும்போது, எருசலேமில் பார்க்கும்போது, அவர் சொல்வதை தான் நீங்கள் கவனிக்கிறீர்கள். அவர் ஒரு போதகர்.

சரி, இறை நம்பிக்கை அற்ற ஒருவர் ஆசியாவில் பெரிய போதகரானது எப்படி? அதற்கான பதிலை பவுல் 1 கொரி. 15:7ல் அளித்திருக்கிறார். அவர்  அங்கு, "பின்பு அவர் யாக்கோபுக்கும் தரிசனமானார் ." சரி. ரெஜினால்ட் புல்லர் சொல்கிறார், பவுல் இப்படி நம்பிக்கை அற்ற நிலையிலிருந்து போதகராகும் நிலையை அடையாதிருந்தால், அப்படி

யாராவது இருக்கிறார்களா என்று யோசித்திருப்போம். ஏன்னா புல்லர் கூறுகிறார், அந்த தரிசனமில்லாமல், இதை உறுதிசெய்திடமுடியாது: 1)யாக்கோபு மனத்திரும்பினார். அதற்கு எந்த காரணமும் இல்லை, மேலும் 2) அவர் நாத்திகனாக இருந்து மிகவும் முக்கிய பொறுப்பான போதகாராகும் நிலையை அடைந்திருப்பது மறுக்க முடியாதது. எனவே முடிவு இதுதான்,அதாவது யாக்கோபின் மனம் மாற்றம் மற்றும் ஆதித்திருச்சபையில் உண்டான நிலை மாற்றம் உயிர்த்தெழுதலுக்கு திடமான ஆதாரமாக கருதப்படுகிறது.

**ஆன்கர்பெர்க்:** அநேகர் அப்போஸ்தலனாகிய பவுலை பார்த்து, ஏன் அவர் கிறிஸ்தவரானார் என்பதை கண்டறிய முயன்று தோல்வியடைந்துள்ளனர். அவர்கள் அதற்கு பல இயற்க்கை தத்துவங்களை கொடுக்கின்றனர்,ஆனால் பவுல் கூறியது அர்த்தமுள்ளதாக இருக்கிறது. அதை பற்றி சொல்லுங்கள்.

கேரி ஹேபெர்மேஸ்:.சரி, இங்கு பவுலினுடைய சாட்சி இருக்கிறது பவுல் அதை மிகவும் கவனமாக சொல்கிறார் ஏனென்றால் இன்றைக்கு, அதாவது என்னுடைய வகுப்பறையில் வழக்கமாக நான் சொல்வதுண்டு, “பவுல் இல்லே  சுவிசேஷங்கள் வெளியே.” அதையே நாம் பற்றிக்கொண்டிருக்க அவசியமில்லை.  சுவிசேஷங்களையும் பார்க்கலாம். பவுலின் கடிதங்களும்  இருக்கிறது. பவுலின் பெயரை கொண்டிருக்கும் 13 நிருபங்கள் இருக்கிறது, விமர்சகர்கள் அதிலிருந்து ஐந்து அல்லது எட்டு நிருபங்களை முன்னிருத்திடுவார்கள். பவுல் தாமே அதை சொல்கிறார், உதாரணமாக, பிலிப்பியர் புத்தகத்தில் தாம் சபையை துன்புறுத்தியதாக கூறுகிறார். எபிரேயனுக்கு எபிரேயன் பரிசேயன், கிறிஸ்தவனின் நண்பன் அல்ல. ஆண்கள் பெண்கள் பிள்ளைகளை சிறைபிடிப்பதால் தேவனுக்கு தாம் உதவுவதாக

நினைத்துக்கொண்டார். மேலும் அவர்களுடைய மரணத்திலுமவர் பங்குள்ளவராக இருந்தார் அப்போஸ்தலர் புத்தகத்தில் கல்லேரியப்பட்ட ஸ்தேவானின் உடைகளை இவர்தான் பிடித்துக்கொண்டிருந்தார்.

பவுல் நம்பிக்கை அற்றவராக இருந்தார். அவர் பட்டதாரி என்று நீங்கள் ஒருவேளை சொல்லலாம் கமாலியேலுக்கு கீழ் இருந்து எபிரேயம் படித்தவர் அதற்க்கான அங்கீகாரம் மற்றும் அதன் கனத்தை பெற்றிருந்தவர். இவர்தான் அது. அவர்தான் கிறிஸ்தவர்களுக்கு பின்னாக போகும்படி தெரிந்தெடுக்கப்பட்டவன். அவர் உயிர்த்த இயேசுவை சந்திக்கிறார். இயேசு அவனிடம், "நீ எனக்கு வேண்டும். நீ என்னுடையவன் என்றார்." பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டார் இப்போது அவர் ஆதி திருச்சபையில் மிகப்பெரிய அருட்பணி இறையியலாலராக கருதப்படுகிறவர் ஆகிறார்.

சரி, என்ன நடந்தது என்று சொல்லும் பவுலின் சொந்த சாட்சி நம்மிடம் இருக்கிறது. பவுல் 1 கொரிந்தியர் 15:8ல் இறுதியாக சொல்லும்போது, அவர் எல்லாவற்றையும் சொல்லி முடித்த பிறகு சொல்கிறார், "கடைசியாக, அகால பிறவி போன்ற எனக்கும் அவர் தரிசனமானார்." அதற்கு சில அதிகாரங்களுக்கு முன்பு, அதே நிருபத்தில், 1 கொரிந்தியர் 9:1ல் சொல்கிறார், "நான் அப்போஸ்தலனா? நான் தேவனை தரிசித்தேனா?" பவுலின் நிருபங்கள் அனைத்திலும் திறவுகோலாக இருப்பது உய்ரித்தேழுதல் தான். நாம் செய்கிற காரியங்களுக்கு திறவு கோலாக இருப்பது உயிர்த்தெழுதல் தாம். அவர் தனியாக எனக்கு தரிசனமானார். அதுமட்டுமல்ல, பவுல் ஒருபோதும் தேவன் தனக்கு அளித்த கிருபைக்காக நன்றி யுள்ளவராக இருக்க தவறியதேயில்லை. என்னுடைய அறிவின் பெருக்கத்திளிருந்து என்னை மீட்டு உம்மண்டை என்னை திருப்பியதர்க்காக உமக்கு நன்றி

என்கிறார். இப்போது,இதில் திறவுகோல் எதுவென்றால் ஒருவேளை உயிர்த்த இயேசுவின் தரிசனம் பவுலுக்கு இல்லாமல் இருந்திருந்தால், அவர் இந்த களத்தில் இருக்க மாட்டார் சாட்சியாக இருந்திருக்க மாட்டார்.

**ஆன்கர்பெர்க்:** இந்த ஆதாரத்தை மனதில் கொண்டு, நாத்திகர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலை நிராகரிக்க முயன்று முன்வைக்கும் முக்கியமான பிரசித்திபெற்ற கொள்கைகளில் இன்றை பார்க்க இருக்கிறோம். அதை மூர்ச்சை கோட்பாடு என்கிறோம் அது இயேசு சிலுவையில் மரிக்க வில்லை என்கிறது, அவர் சாதரமான மயக்கமடைந்து விழுந்தார். Dr. ஹெபர்மாஸ் இதை விளக்குகிறார்.

கேரி ஹேபெர்மேஸ்:.சரி, இந்த மூர்ச்சை கொட்ப்பாடானது 1700 களில் மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்தது குறிப்பாக சொன்னால் 1800 களின் முதல் கால் நூற்றாண்டுகள் வரை பிரபலமாக பேசப்பட்டது, 19ம் நூற்றாண்டில் டேவிட் ஸ்ட்ராஸ் இதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்க முன்வந்தார். அதை பற்றி பேசுவதற்கு முன்பு, நாம் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் இதற்கிடையில் மருத்துவ விஞ்ஞானம் உட்புகுந்து சில கருத்தை முன்வைத்தது, “வெல் அதாவதுசிலுவை மரணம் என்பது மூச்சுதிணரலால் உண்டாகும் மரணம் சிலுவை மரணம் வருத்தத்தை உண்டாக்கும், இயேசுவின் விஷயத்தில், இருதயத்தில் பாதிப்பை உண்டாக்கியது. ஒருவேளை ஏற்கனவே மரிக்காமல் இருந்திருந்தாலும், அவர் மரித்துபோயிருப்பார்.

சரி, ஸ்ட்ராசை கவனிப்போம் ஏனென்றால் மருத்துவத்தை அறியாதிருந்தால் ஸ்ட்ராஸ் சொல்வதை கவனித்து பார்க்கலாம் இந்த

மூர்ச்சை கோட்ப்பாட்டை ஸ்ட்ராஸ் கிண்டலாக பார்த்தார். அவர் இதற்கு சற்று விலகியே இருந்தார். அவர் மிகவும் வெளிப்படையாக பேசுகிற டுபிஞ்சேன் பல்கலைகழக ஓய்வூதிய அலுவராக இருந்தார் ஆனால் இவரது முக்கிய வேலையை 1835 செய்தார் இயேசுவின் வாழ்க்கை என்ற புத்தகத்தில் மூர்ச்சை கோட்பாடு சரிவராது என்றும் அதின் பிரச்சனையையும் எடுத்து சொன்னார்: அது மாற்றுகருத்துடையது. மூர்ச்சை கோட்ப்பாட்டில் உயிரோடிருந்த இயேசுவை பற்றி இருக்கிறது உயிர்த்தெழுந்த இயேசுவை பற்றி இல்லை இது எப்படி பொருந்தும்.

இயேசு சிலுவையில் மரித்திருக்க வேண்டும். இல்லை என்றால். அவர் கல்லறையில் மரித்திருக்க வேண்டும்.அப்படியும் இல்லை. அவரால் அந்த கல்லை தனியாக புரட்டி போடா முடியாது. ஒருவேளை அப்படி இருந்திருக்கலாம். சரி, ஸ்ட்ராஸ் காவலாளிகளை நம்பவில்லை ஆனால் காவாலாளிகள் வெளியில் இருந்ததாக நம்புயக்ராவர்கள், அவர் அவைகளுடைய உதவியை பெற்றிருப்பார் என்கின்றனர். ஆனால் ஸ்ட்ராஸ்ஒரு பிரச்சனையை பார்க்கிறார். உங்களை போலவே தான். சிலுவையில் மரிக்கவில்லை, கல்லறையிலும் மரிக்கவில்லை, கல்லையும் புரட்ட முடியாது. சீஷர்கள் இருக்கும் இடத்திற்கு வருகிறார் (டக், டக், டக்) கதவை தட்டுகிறார். இந்த மனிதருடைய தோற்றம் எப்படி இருக்கும்? அவர் மனிதனான இயேசுதான். சிலுவையில் அறியப்பட்டவர். அவருடைய காயங்கள் திறந்தபடியே இருந்தது. தலையிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவருடைய தலைமயிர் கழுவப்படவில்லை. அதாவது, தண்ணீரும் இரத்தமும் பீச்சியடித்த விழாவின் காயம் திறந்தபடியே இருந்தது. அவர் கூனிக்குறுகி, நொண்டிக்கொண்டு, தள்ளாடுகிறார். அவர் (டக், டக்,

டக்): “மறுபடியும் உயிர்த்தெழுவேன் எண்டு சொன்னேன் அல்லவா என்றார்.”

பிரச்சனையாக, ஸ்ட்ராஸ் சொல்கிறார், இந்த மூர்ச்சி கோட்ப்பாட்டில் உயிருள்ள இயேசுவை பற்றி சொல்லியிருக்கிறதே தவிர உயிர்த்தெழுந்த இயேசுவை பற்றி இல்லை. சரி, ஸ்ட்ராஸ் உயிர்த்தெழுதலை நம்பவில்லை, ஆனால் சீஷர்கள் நம்பினத்தை அறிவார். மூர்ச்சி கோட்பாடு உங்களை ஏ ல இருந்து பிக்கு கொண்டுசெல்லாது. இந்த மாதிரியான இயேசுவைத்தான் பார்ப்பீர்கள்: தேவனே, போதும் வாங்க. ஒரு நாற்காலி எடுங்க. தண்ணீ கொண்டு வாங்க. மருத்துவர கூப்பிடுங்க.”

ஸ்ட்ராஸ் சொல்வதை எடுத்து சொல்லன்னுன்னா, இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சொல்வதற்கு முன்பு சீஷர்கள் ஒரு மருத்துவரை அழைத்து வந்திருப்பார்கள் ஏன்னா இங்க சொல்லும்போது பேதுரு சொல்கிறார், “ஒ, தம்பி, அவரை போல ஒருநாளில் எனக்கும் உயிர்த்தெழுந்த சரீரம் உண்டாயிருக்கும்.” இதை பார்க்கும்போது, இது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு மிகவும்சம்பந்தம் உடையதாக காணப்படுகிறது. விசுவாசிகள் எழும்புவார்கள். சரி,இங்கு, ஸ்ட்ராஸ் விசுவாசிகள் எழும்புவார்கள் என்பதை நினைக்க வில்லை அங்கு காவலாளிகள் இருந்ததை யோசிக்கவில்லை இயேசு உயிர்த்தார் என்பதை யோசிக்கவில்ல, ஆனால் சீஷர்களின் சார்பில் இதை நீங்கள் நம்பாமல் போனால், இது உங்களுக்கு புரியாது. பிரச்சனை என்னன்னா, “மூர்ச்சை” உயிர்த்த இயேசுவை தாங்கள் கண்டதாக நம்பும் சீஷர்களின் அனுபவத்தை இது எந்தவிதத்திலும் பாதிக்கபோவதில்லை.

*****

**ஆன்கர்பெர்க்:** அடுத்தது, இயேசுவின் சீஷர்களுக்கு என்ன நடந்தது என்பதை விளக்க முயலும் நாத்திகர்கள் சொல்லும் நான்காவது இயற்க்கை கொள்கை என்னவென்றால் பிரம்மை என்ற கோட்பாடு. அதாவது, இயேசு தத்ரூபமாக அவரது சரீர தோற்றத்தில் அவரது சீஷர்களுக்கு வெளிப்படுவதற்கு பதிலாக அவரது சீஷர்களுக்கு மன பிரம்மை உண்டானது என்று சொல்லுகிறார்கள். கேளுங்கள்.

கேரி ஹேபெர்மேஸ்:.இந்த பிரம்மை என்ற கொள்கையின் தவறு என்ன? எந்த கொள்கையிலும் அதிக பிரட்ச்சனை இருக்காது.

பிரட்ச்சனை 1: ஒரு குழுவான மக்கள், ஒரே நேரத்தில் 2 பேருக்கு, ஒரேவிதமான பிரம்மை உண்டாகாது. பிரம்மை என்பது நீங்கள் உண்மையென நம்பும் ஒரு விஷயத்தை உங்கள் மனக்காட்சியில் நீங்கள் பார்ப்பதாகும். ஒருவருடைய கனவை எப்படி அகிர்ந்துகொள்ள முடியாதோ அப்படியே பிரம்மையையும் பகிர்ந்துகொள்ள முடியாது. எனவே, உதாரணமாக குழுவான மக்களுக்கு தோன்றினார் என்பதற்கான உதாரணம் நமக்கிருக்கிறது, அதை நாம், 1 கொரிந்தியர் 15: 3ல் பார்க்கிறோம் 3 பேருக்கு தோன்றினது பிரம்மை கிடையாது, பலருக்கு உண்டாகாது.

இரண்டாவதாக, சீஷர்கள் அதை நம்பவில்லை எனபது. எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படும் விஷயம், வசனத்தின்படியும் உளவியலின் படியும் இதை எதிர்ப்பார்ப்பது கூடாதகாரியம், சீஷர்கள் அப்படியொரு ஏம்மாற்றத்தை சந்தித்தனர்: நல்ல நண்பர், கூடவேஇருந்தவர், எல்லாம் முற்றிலும் நாசமானது. அவர்கள் உயிர்த்தெழுதலை எதிர்பார்த்து இந்த மாதிரியான கற்பனை காட்சிகளை ஏற்ப்படுத்தி

கொண்டனர்என்கிறார்கள். இரண்டாவதாக அவர்கள் சரியான சுய நினைவோடு இருக்கவில்லை.

மூன்றாவதுதான் மிகவும் பேரழிவை ஏற்ப்படுத்தும் விஷயம்: பலதரப்பட்ட மக்கள் கூட்டம், காலங்கள், இடங்கள். ஆண்கள் இருந்தனர், பெண்கள் இருந்தனர், வீட்டிற்க்குள், வெளியில், நடக்கையில், நிற்கையில், எல்லாவற்றிலும். இதில் பிரச்சனை என்னவென்றால் இந்த பலதரப்பட்ட ஒவ்வொருவரும் ஒரேவிதமான பிரம்மையை பார்த்தனர் என்பது எளிதில் நம்பக்கூடிய விஷயமாக இல்லை என்கின்றனர். இன்றைக்கு பிரம்மை எனபது அபூர்வமான ஒன்று ஆனால் அவர்கள் இப்படி பார்க்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கலாம். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நான்காவது பிரச்சனை: ஒருவேளை சீஷர்கள் பார்த்ததுபிரம்மை என்றால், காலியான கல்லறை என்பதில் பிரச்சனை உண்டாகும். அது காலியாக இருந்திருக்க முடியாது. அதனால் தலைவர்களின் கருத்து என்னவென்றால், “சரி, நண்பர்களே, இப்ப இதுல ஒரு பிரச்சனை இருக்கு.” விமர்சகர்கள் சொல்கிறார்கள், “சரி, இருக்கட்டும், 50 நாட்களுக்கு பிறகு அந்த சரீரம் எப்படி இருக்கும்? ஹே, இதில், எந்தவித வித்தியாசமும் இருக்காது. இந்த சரீரம் சிலுவையில் அறையப்பட்டபடியே இருக்கிறது. இதோ ஆணிகள். இதுதான் உங்க மனிதன். இந்த கொள்கையை தர்கர்க்கிறது. எனவே காலியான கல்லறை என்பது பிரம்மை என்ற கருத்தை தகர்க்கிறது.

பிரம்மையானவை வாழ்வை மாற்றிடாது, என்றைன்றைக்குமாய் வாழ்வை மாற்றிடாது.இந்த காலத்தில் பிரம்மையை பற்றி ஆராய்ச்சிசெயும் சில நண்பர்கள் எனக்கு இருக்கிறார்கள், ஜனங்கள் பிரம்மைஎன்பதை வெளிப்படையாக சொல்கிறார்கள். அவற்றை

சரிசெய்யும்படி எதையாகிலும் சொல்லும்போது அதற்கு மாறானவைகளை சொல்கிறார்கள், என்ன சொல்லுங்கன்னு தெரியுமா. 2 விதமான மறுப்புகள். ஜனங்கள் “இப்படிஎல்லாம்னடக்காது. என் நண்பர் இந்த மாதிரி எதையுமே பார்க்கல. அப்படி அவங்க பாக்கலைன்னா, அதை பார்த்த வேறுயாராவது இருந்தாங்கன்னா, அவங்க மற்றவர்களிடம் அதை சொல்வாங்க, குறிப்பா உயிர்த்தெழுதலை போன்ற அபூர்வமானவற்றை சொல்வாங்க. அவை வாழ்வில் மாற்றத்தை உண்டாக்காது.

ஐந்து பிரச்சனைகள் இருக்கு. சீக்கிரமா இன்னும் இரண்டை சொல்லுகிறேன். யாக்கோபு மற்றும் பவுல். அவர்கள் சரியான சுயநினைவோடு இருக்கல. யாக்கோபு, தீவிர நாத்திகர். அவர் தன்னுடைய வீராப்பை விட்டுவிட்டு தனது உயிர்த்தெழுந்த சகோதரனை பற்றிக்கொள்ள செய்தது எது?யூத குளத்தில் Ph.D பட்டம் பெற்ற பவுல் அதை விட்டுவிட்டு கிறிஸ்துவ அதிகாரத்தோடு மிஷினரியாக இறையியலாளனாக செய்தது எது? அவர்கள் இருவரில் ஒருவர் உயிர்த்த இயேசுவை பார்க்க சந்திக்க ஆவலாக இருந்தார்கள் என்று சொல்வது மிகவும் கடினம்.

ஏழு விமர்சனங்கள். இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். இன்னும் அதிகம், இருக்கிறது,ஆனால் அவை அனைத்தும் பிரம்மை என்ற காரியத்தை முன்வைக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** Dr. வில்லியம் லேன் கிரேக் இந்த பிரம்மை என்ற கொள்கையை நிராகரிக்க இன்னொரு முக்கியமான காரணமிருப்பதாக சொல்கிறார்.

**கிரேக்**:..இந்த பிரம்மை என்ற அனுமானத்தில் இருக்கும் இன்னொரு பிரட்ச்சனை விளக்கமளிக்கும் ஆற்றல் வலுவற்ற நிலையில் இருக்கும். இது அந்த தோற்றத்தை விளக்கி சொல்வதுபோல தோன்றிடும், ஆனால் உண்மையில், ஏன் சீஷர்கள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்க முன்வந்தனர் என்பதை சொல்வதில். கவனித்து பாருங்கள், வாழ்விற்கு பிறகு இருக்கும் நிலையை பற்றிய யூதர்களின் மனப்பான்மை இங்கு சொல்லப்படுகிறது, அவர்கள் இயேசு ஆபிரகாமின் மடியில் இருப்பார் என்றுதான் நினைத்தனர், பரதீசியில் இருப்பார், உலகின் இறுதியில் நடக்கபோகும் உயிர்த்தெழுதல் வரைக்கும் மரித்த நீதிமான்களின் ஆத்துமாக்கள் தேவனோடு அங்குதான் இருக்கும். அதினால் தான், ஒருவேளை அவர்களுக்கு இயேசுவின் தரிசனம் ஒரு பிரம்மையாக இருந்திருந்தால், அவர் எடுத்துக்கொள்ளப்பட்டதை பார்த்ததை என்னவென்று சொல்லமுடியும், பரலோகத்திற்கு, தேவன் அவரை உலனின் முடிவில் நடக்கும் உயிர்த்தெழுதல் வரை எடுத்துக்கொள்ளாமல் இருந்திருப்பார். ஆனால்  இது உண்மையாக இருந்திருந்தால் பலரும் இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் பரலோகத்தில் இயேசுவின் மகிமை வெளிப்பட்டதாகவும் கற்பனை செய்திருப்பார்கள், அவர் உண்மையாய் மரணத்திலிருந்து உயிர்த்ததை நினையாமல் இருப்பார்கள்.

**ஆன்கர்பெர்க்:** இறுதியாக இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு விரோதமாக கிறிஸ்தவரல்லாத மக்கள் வைக்க முயன்ற இயற்கையின் கொள்கை என்னவென்றால் கிரீகோ ரோம புராணங்களான மரித்து உயிர்க்கும் தேவர்கள் எனபது இதற்கு இணையாக இருக்கிறது என்பதாகும். மார்க்கங்களில் மறைபொருளாக இருப்பவற்றை

கிறிஸ்தவர்கள் தங்களுக்கு பயன்படுத்திகொள்கிறார்கள் என்ற கருத்து உண்டானது. அதாவது, இந்த கொள்கையின் கருத்தை தான் வல்லுநர்களில் ஒருவரான பீட்டர் ஜென்னிங்ஸ் ABC ஸ்பெஷலில் முன்வைத்தார், தி சர்ச் பார் ஜீசஸ். Dr. வில்லியம் லேன் கிரேக் அந்த கொள்கையை இந்த ஆதாரம் எப்படி தகர்க்கிறது என்பதை கூறுகிறார்.

**கிரேக்**:..நான் அதிர்ச்சியடைந்தேன், உண்மையாகத்தான், ABCஸ்பெஷல்ல நேர்காணலில் பங்குபெற்ற ஒரு வல்லுனர்சொல்வதை கேட்டேன் அவர் ஆதிகால சீஷர்கள் அனைவரும் கிரீகோ ரோம கட்டுக்கதைகலான மரித்து உயிர்த்த கடவுள்களை பற்றிய கதைகளால் தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பினார் என நம்பும் கட்டயத்திற்கு உள்ளானார்கள் என்றார். நான் ஆச்சரியப்பட்டதற்கு காரணம் என்னன்னா,அதாவது இந்த அனுமானம்தான் ஆதிகாலத்தில் மார்க்கங்களின் வரலாற்று பள்ளிகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் சிந்தனையை ஆட்கொள்ளும் விதமாக  பின்னிப்பினைக்கப்பட்டதாக இருந்தது. ஆனாளந்த பள்ளிகளில் சீக்கிரத்தில் தகர்ந்துவிட்டது அந்த கருத்து இன்றைய பெரும்பாலான புதிய ஏற்ப்பாட்டு வல்லுனர்களால் கைவிடப்பட்டிருக்கிறது. எனவே இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி சீஷர்கள் விசுவாசித்து கிரீகோ ரோம கட்டுக்கதையிளிருந்து வந்தது என்பது வழக்கத்திலிருந்து விளக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இன்றைய புதிய ஏற்ப்பாட்டு வல்லுனர்கள் நசரேயனாகிய இயேசுவை பற்றி புரிந்துகொண்டது கிரீகோ ரோம கட்டுக்கதை அல்ல என்பதை புரிந்துகொண்டனர் ஆனால், மாறாக, முதல் நூற்றாண்டின், பாலஸ்தீன யூத கலாசாரத்தில் நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியை புரிந்துகொண்டனர். மேலும் யூத கலாசாரத்தின் இயேசுவை பற்றிய

கூற்றுகளும், இயேசுவின் யூததன்மையை அவர்கள் புரிந்துகொண்டதும், இதற்கு உண்மையான சாட்சியாக இருக்கிறது.

சரி, எதினால் மார்க்க வரலாற்று பள்ளிகள் தகர்ர்ந்தது? இதற்கு, அடிப்படையான இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, கருத்துக்கள் போலியானவைகள். அதாவது, உயிர்த்தெழுதலை பற்றிய கூற்றுகள் மற்றும் காலியான கல்லறை பற்றிய உண்மைககலி பற்றி கிரீகோ ரோம புராணங்களில் இதற்கு எந்த ஒப்புமையும் அளிக்கப்படவில்லை. இந்த மரித்து உயிர்க்கும் கடவுள்கள் என்று அந்த வரலாற்றில் யாருமே இல்லை. அவை அனைத்தும் விதைப்பின் சுழற்சியை கூறும் கதைகள். விதைகள் வெயிலில் காய்ந்து மாண்டுபோகிறது, மத்தில கிழக்கின் கோடைகாலத்தில் வரண்டுபோகும் பிறகு குளிர்ந்த வசந்த காலத்தில் மீண்டும் துளிர்க்கிறது. இவை அனைத்தும் வரலாற்றில் ஒரு தனி நபருக்கு பொருந்தும் என்பது எஅற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும். அதோடு, அதற்கும் உயிர்த்தெழுதலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.இந்த தேவர்கலான தம்மூஸ் அடோனிஸ் மற்றும் ஓசிரிஸ் மறுபடியும் உயிரடையவில்லை, மரணத்திலிருந்து அவை ஒருபோதும் உயிரடையவில்லை. அவை இன்னும் மரணத்திற்கு பின்னான வாழ்வில்தான் உள்ளது. எனவே  இதை வைத்து காலியான கல்லறை மற்றும் உயிர்த்த இயேசுவின் தரிசனம் மற்றும் இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற காரியங்களோடு ஒப்புமை படுத்து பார்ப்பது சிந்தனைக்கு அப்பாற்பட்ட காரியமாக இருக்கிறது.

இரண்டாவதாக, ஆதிகால சீஷர்களுக்கும் இந்த புராணக்கதைகளுக்கும் இடையில் எந்தவித்த சம்பந்தமும் இல்லை. இந்த, புராணக்கதைகள் யூத மார்க்கத்திலும் யூதர்களுக்கும் வெறுக்கப்படுவதாக இருந்தது.

வைராக்கியமான யூதர்களுக்கு இது தேவதூஷனமாக அருவருப்பாக இருந்தது. ஆதியிலிருந்த சீஷர்கள் நசரேயனாகிய இயேசு உண்மையாய் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை அவர்கள் நம்பகமாக விசுவாசித்தார்கள் என்று சொல்லக்காரணம் இந்த ஓசிரிஸ் அடோனிஸ் மற்றும் ஹீர்க்லூசின் கட்டுகதையாக கூட இருக்கலாம் அது அபத்தமான கருத்து உங்களுடைய மரித்த நம்பர் உயிரோடு எழுந்திருப்பார் என்று நீங்கள் ஈ.டீ படத்தை பார்த்து நம்பினால் அது அபத்தமானது. அதில் ஈ.டீ மறுபடியும் உயிர் அடைகிறான். இந்த கட்டுக்கதைகளை நண்பிதான் அவர்கள் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று நம்பும்படி இந்த நபர்கள் முன்வந்தனர் என்று சொல்வது வரலாற்றில் பொருந்தாத ஒன்றாகும் அவர்கள் இந்த சத்தியமான விசுவாசத்திற்காக மரணத்திற்கு ஏதுவான உபத்திரவத்தை சகிக்க ஆயத்தமாக இருந்தனர்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இன்றைக்கு, 2 விதமான மக்கள் கூட்டம் இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், இயேசுவை ஏற்றுக்கொண்டு முழுவதுமாய் அவரையே நம்பி வாழ்கிறவர்கள் இல்லாவிட்டால் இதுவரை அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள். இன்றைக்கு நீங்கள் ஒருவேளை இயேசுவை விசுவாசித்து ஏற்றுகொள்ள விரும்பினால், உங்களுடைய வாழ்வில் அவர் இடைபட விரும்பினால், உங்களை இரட்சித்து மன்னித்து உங்களில் மாற்றத்தை உண்டாக்க விரும்பினால், அவர் அதற்கு ஆயத்தமாக இருக்கிறார். இதுதான் உங்கள் இருதய வாஞ்சையாக இருந்தால், இப்போதே உங்களை ஜெபத்தில் நடத்திட விரும்புகிறேன். என்னோடு இணைந்து ஜெபிப்பீர்களா?

ஓ, தேவனே, நான் பாவி என்பதை அறிவேன் எண்ணெய் என்னால் இரட்சிக்க முடியாது. நான் உம்மை நம்புகிறேன், கர்த்தராகிய இயேசுவே, நீர் தேவனுடைய குமாரன், நீர் சிலுவையில் மறித்து என்னுடைய பாவங்களுக்காக பலியானீர் உம்மை நம்பி உம்மிடத்தில் வருகிறவர்களை கழுவி சுத்திகரிக்கிரீர். இப்போதே ஏன் மீது நான் கொண்டிருக்கும் நம்பிக்கையை உம்மீது வைத்து உம்மை விசுவாசிக்கிறேன். என்னை மன்னித்து ஏன் வாழ்வில் வாரும். உம்மில் விசுவாசமாயிருப்பவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கும்படி நீர் மரணத்திலிருந்து உயிர்த்து மரணத்தை வென்றவராக இருக்கிறீரே உமக்கு நன்றி. இந்த நிமிடத்திலிருந்து, உம்மையே நம்புகிறேன் நீரே ஏன் இரட்சகர் என விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

இப்ப, இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால், வேதம் கூறுகிறது தேவன் உங்கள் இருதயத்தை பார்க்கிறார் உங்களை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் சார்பில் உங்களை மன்னிக்கிறார் அதினால் நீங்கள் அவரோடுகூட நித்தியத்தில் இருப்பீர்கள். வேதம் சொல்கிறது, அவருடைய நாமத்தை நோக்கி கூப்பிடுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்."

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.